1971 ஜூலை 20]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஹாஸ்டலில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இப்பொழுது ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் உடைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத்தான்—வெறும் மாணவர் களுக்கு மட்டும்—கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இனிமேலாகிலும் அரசாங்கமே முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பரிசீலனை செய்யலாம்.

Educational tours for Boys and Girls of Harijan Hostels

* 89 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to arrange educational tours for Harijan boys and girls residing in Government Harijan Hostels in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரசு கலை-கைத்திறப் பணிக் கல்லூரியில் (Government College of Arts and Crafts) படிப்பவர்களும், சென்னை-7-ல் உள்ள தொழில் கல்வி மாணவர்களுக்கான அரசு விடுதியில் (அரிசன நலத் துறை) தங்கியிருப்பவர்களுமாகிய மாணவர்கள் கட்டிடக் கலை—கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குக் கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்கையில் அரசு அம்மாணவர்களுக்குத் தற்போது தனி மானியங்கள் வழங்க ஒப்பளிப்பு வழங்குகின்றது. இச் சுற்றுலாக்கள் அவர்களுக்குரிய பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாக அமைந் திருப்பதே அதற்குக் காரணமாகும். மேற்சொன்ன விடுதியில் தங்கியிருப்பவர்களைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள அரசு அரிசன விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ, மாணவியர்க்குக் கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

THIRU *B. VENKATASWAMY*: Harijans are economically very poor. According to the answer given by the Hon. Minister some sections of boys and girls are being taken on tours to other areas. Will the students living in these hostels and in high schools also be taken on tour so as to improve their knowledge and education?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களையே இப்படிப்பட்ட சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வதாக இருந்தது. இப்போது அந்தத் திட்டம் இல்லை. பின்னர் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கல்வியின் ஒரு பகுதியாக சுற்றுலாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் தமிழகத்திலுள்ள சில சென்டர்களுக்குத்தான் அனுப்புகிறார்களா? வெளிமாநிலங்களுக்கும் அனுப்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இவற்றில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று டிப்ளமா கோர்ஸ். இதுவும் 3 தரமாகப் பிரிக்கப்பட்டு, இந்த 3 குழுவினரும் மூன்று இடங்களுக்குப் போகிறார்கள். முதல் பாச் தென்னிந்தியா. இரண்டாவது பாச் வட இந்தியா, மூன்றாவது பாச் வட கிழக்குப் பகுதி—என்பதாக மூன்று கூறுகப் பிரித்து அனுப்பப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு தனிப்பட்ட மருத்துவ வசதி

* 283 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு, தனிப்பட்ட மருத்துவ வசதி குறித்தும் அதற்காகும் செலவைத் திரும்பப் பெறுவது குறித்தும், மதுரைப் பஞ்சாலைத் தொழிற்சங்கங்களின் தொழிலாளர் தலைவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) ஆம். மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரிடமிருந்து 21—3—1970-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் திரு. டி. சின்னான் என்னும் தொழிலாளி அவர் தனிப்பட்ட முறையில் செய்து கொண்ட மருத்துவச் சிகிச்சைக்கான செலவைத் திருப்பி அளிக்கும் கோரிக்கை சென்னை சுகாதார-குடும்ப நல இயக்குநரால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(இ) மேற்படி தொழிலாளி தனது சிகிச்சைக்கான செலவு ரூ. 300-ஐ திருப்பியளிக்கக் கோரியுள்ளார். ஆனால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (மருத்துவப் பலன்கள்) விதிகளின்படி ஒரு தொழிலாளி, மருத்துவரின் ஆலோசனைக்கு மாறாக, திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளிலிருந்து வெளியேறி, தனது சௌகரியத்திற்கேற்றபடி, தனிப்பட்ட மருத்துவ சிகிச்சையை மேற்கொண்டால் அந்தச் சிகிச்சைக்கான செலவுத் தொகையை திருப்பி பெறுவதற்கான அவரது கோரிக்கை அனுமதிக்க இயலாது. இவ்வாறு மேற்படி தொழிலாளிக்குத் தனியே அறிவிக்கப்பட இருக்கிறது.